# பால்வளத் துறை

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கிராமப்புற மகளிர் பால் பண்ணை திட்டம்.<br>விபரம்<br>மகளிர் சுய உதவிக் குழுவின் 25 உறுப்பினர்களுக்கு தலா இரண்டு கறவை மாடுகள் கொள்முதல் செய்து மானிய விலையில் வழங்கப்படும். அந்த மாடுகள் சங்கத்தின் பொது கறவை கூடத்தில் (Common Cattle shed) வளர்ப்பதற்கும் தீவனம் வழங்குவதற்கும் வசதிகள் செய்யப்படும். | மகளிர் சுய உதவிக்குழுவின் உறுப்பினர்கள் | மகளிர் சுயஉதவிக்குழு பதிவு பெற்ற சான்றின் நகல் | பொது மேலாளர், கோவை, மதுரை, தஞ்சாவூர் மாவட்டகூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் | ஆணையர் அலுவலகம், பால்வளத்துறை சென்னை–51<br>044–25555193 |
| 2. | மாநில அளவில் +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் (State Rank) பெறும் இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும், நிரந்தர பணியாளர்களின் குழந்தைகளில் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு 5 ஆண்டுகள் அல்லது அவர்களது படிப்புக்காலம் இதில் எது குறைவோ அதுவரை மாதம் ரூ.1000/– வீதம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும். | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் / இணையத்தில் பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்களின் ஆண்/பெண் குழந்தைகளில் மாநில அளவில் தமிழக அரசு கல்வித்துறை (State Board) நடத்திய +2 தேர்வில் (State Rank – First, Second or Third) அதிக மதிப்பெண்கள் பெற்ற ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழுந்தைகள் பெற்ற மதிப்பெண் விபரத்தினை அனுப்ப வேண்டும் தேர்ச்சி பெற்ற மாணவர் தமிழ் மொழியினை முதல் மொழியாக (First Language) +2 தேர்வில் எழுதியிருக்க வேண்டும் | பள்ளிக்கல்வி சான்றிதழ் | பொது மேலாளர், அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்<br><br>நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை–51<br>அனைத்து சரக துணைப்பதிவாளர் (பால்வளம் )கள் | ஆணையர் அலுவலகம், பால்வளத்துறை சென்னை–51<br>044–25555193 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரார் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| **3.** | மாநில அளவில் +2 தேர்வில் அதிக மதிபெண் பெறும் இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களின் குழந்தைகளில் 5 ஆண் மற்றும் 5 பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும், ஒரு கணினி வழங்கப்படும் | தெரிந்தெடுக்கப்படும் +2 தேர்ச்சி பெற்ற மாணவர் தமிழக அரசு கல்வித்துறை (State Board) நடத்தும் +2 தேர்வு எழுதியவராக இருக்க வேண்டும்.<br>+2 தேர்ச்சி பெற்ற மாணவர் தமிழ் மொழியினை முதல் மொழியாக (First Language) +2 தேர்வில் எழுதியிருக்க வேண்டும் | பள்ளிக்கல்வி சான்றிதழ் | பொது மேலாளர்,<br>அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்<br>நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை–51<br>அனைத்து சரக துணைப்பதிவாளர் (பால்வளம் )கள் | ஆணையர் அலுவலகம், பால்வளத்துறை சென்னை–51<br>044–25555193 |
| **4.** | இணையம் மற்றும் **மாவட்ட** ஒன்றியங்களில் பணிபுரியும் முறையான பணியாளர்களின் 2 குழந்தைகளுக்கு அவர்கள் பிவிஎஸ்ஸி (தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம்) அல்லது பி.டெக் (பால்வள தொழில் நுட்பம்) அல்லது பி.எஸ்.ஸி (பால்வள அறிவியல் போன்ற பட்டப் படிப்புகளை நன்மதிப்பு பெற்ற நிறுவனங்களில் படிப்பதற்கும் அல்லது தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியில் பல்கலைககழகத்தில் பால்வள அறிவியலில் முதுநிலை பட்டப்படிப்பு படிப்பதற்கும் அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு ரூ.40,000/– பட்டப்படிப்புக் கட்டணம் + விடுதிக் கட்டணம் உட்பட) அல்லது அவர்கள் செலுத்திய உண்மையான தொகை | தெரிந்தெடுக்கப்படும் +2 தேர்ச்சி பெற்ற மாணவர் தமிழக அரசு கல்வித் துறை (State Board) நடத்திய தேர்வு எழுதியவராக இருக்க வேண்டும்.<br>+2 தேர்ச்சி பெற்ற மாணவர் தமிழ் மொழியினை முதல் மொழியாக (First Language) +2 தேர்வில் எழுதியிருக்க வேண்டும்.<br>பணியாளர் மகன் / மகள் தமிழக அரசு கல்வித்துறை (State Board) நடத்திய +2 தேர்வில் முதல் தடவையாக (First appearance) தேர்வில் எழுதி வெற்றி பெற்றிருக்க வேண்டும். | பள்ளிக்கல்வி சான்றிதழ் | பொது மேலாளர்,<br>அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்<br>நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை–51<br>அனைத்து சரக துணைப் பதிவாளர் (பால்வளம் )கள் | ஆணையர் அலுவலகம், பால்வளத்துறை சென்னை–51<br>044–25555193 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| | இதில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படும். இத்தொகையை பெறும் மாணவர்கள், அவர்களின் படிப்பு முடிந்தபின் 5 ஆண்டுகள் இணையம் அல்லது ஒன்றியங்களில் பணிபுரிய வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படும் | | | | |
| 5. | <u>ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை சார்ந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும் உறுப்பினர்களின் குழந்தைகளில் +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஒருவருக்கு ஒரு கணினி வழங்கப்படும்</u> | அந்தந்த மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை சார்ந்த பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் பால் வழங்கும் உறுப்பினர்களின் குழந்தைகளில் அந்த ஒன்றிய எல்லையில் படித்த உறுப்பினர்களின் குழந்தைகளில் ஒரு குழந்தையைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும்.<br><br>தேர்ந்து எடுக்கப்படும் மாணவன் அல்லது மாணவியின் தந்தை அல்லது தாய் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருந்து சங்கத்திற்கு பால் ஊற்றி வருபவராக இருத்தல் வேண்டும்.<br><br>உற்பத்தியாளர்களின் மகன் அல்லது மகள் தமிழக அரசு கல்வித் துறை (State Board) நடத்திய +2 தேர்வில் முதல் தடவையாக (First appearance) தேர்வு எழுதி வெற்றி பெற்றிருக்க வேண்டும்.<br><br>மேற்படி தேர்வில் தமிழ் மொழியினை முதல் மொழியாக எடுத்து எழுதி இருக்க வேண்டும். | பள்ளிக்கல்வி சான்றிதழ் | பொது மேலாளர், அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்<br><br>நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை–51<br><br>அனைத்து சரக துணைப் பதிவாளர் (பால்வளம்) கள் | ஆணையர் அலுவலகம், பால்வளத்துறை சென்னை–51<br>044–25555193 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| | | இவர் +2 தேர்வை (Private Study) தனி வழிக்கல்வி மூலம் படித்து இருக்க கூடாது. உற்பத்தியாளர்களுடைய குழந்தைகள் 2 அல்லது அதற்கு மேலும் ஒரே மதிப்பெண்களை பெற்றிருக்கும் பட்சத்தில் அந்த மாணவனுடைய தந்தை அல்லது தாய் கடந்த நிதி ஆண்டு மற்றும் நடப்பு நிதி ஆண்டில் சங்கத்திற்கு அதிகமான பால் ஊற்றிய உறுப்பினரின் மகன் அல்லது மகள் மாவட்டத்தின் ஒன்றியத்தில் தேர்ந்தெடுக்க வேண்டும். | | | |
| **6.** | <u>மாநில அளவில் +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் **(.State Rank)** பெறும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் ஊற்றும் உறுப்பினர்களின் குழந்தைகளில் ஓர் ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு மாதம் ரூ.1000/– கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.</u><br>இத்தொகை 5 ஆண்டுகள் அல்லது அவர்களது பட்டப்படிப்பு காலம் இதில் எது குறைவோ அதுவரை வழங்கப்படும் | பிரதம சங்கங்களின் உறுப்பினராக இருந்து சங்கத்திற்கு பால் ஊற்றி வரும் உற்பத்தியாளர்களின் மகன்/ மகளுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும்<br>உற்பத்தியாளர்களின் மகன்/மகள் தமிழக அரசு கல்வித்துறை (State Board) நடத்திய +2 தேர்வில் மாநிலத்தில் முதல் அல்லது இரண்டாவது அல்லது மூன்றாவது ரேங்க் (State Rank- First Rank,Second Rank or Third Rank) பெற்றிருத்தல் வே,ணடும்.<br>மேற்படி ரேங்க் பெற்ற மாணவர்/மாணவி +2 தேர்வில் தமிழ்மொழியினை முதல் மொழியாக எடுத்து எழுதியிருக்க வேண்டும். | பள்ளிக்கல்வி சான்றிதழ் | பொது மேலாளர், அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்<br><br>நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை–51 | ஆணையர் அலுவலகம், பால்வளத்துறை சென்னை–51<br>**044–25555193** |

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| | | மாணவர்/மாணவியின் தந்தை பிரதம பால் உற்பத்தியாளர் சங்கத்தில் உறுப்பினராக இருந்து சங்கத்திற்கு பால் ஊற்றி வருபவராக இருத்தல் வேண்டும். | | | |
| 7. | **<u>எருமைக்கன்று வளாப்புத் திட்டம்</u>** தமிழகத்தில் வீழ்ச்சி அடைந்து வரும் எருமை இனத்தினை தடுக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் நான்கு மாத எருமைக் கிடாரி கன்றுகளை தேர்வு செய்து உறுப்பினர்களக்கு அதனை 32 மாதங்கள் வரை வளர்ப்பதற்குரிய வசதிகள் ஏற்படுத்துதல் அதாவது திடஉணவு, பூச்சி மருந்து தடுப்பூசி, கால்நடை உதவிகள் அளித்தல் | பால் உற்பத்தியாளர்கள் | பால் உற்பத்தியாளகள், கூட்டுறவு சங்கங்களுக்கு பால் உற்பத்தி செய்யும் உறுப்பினராக இருக்க வேண்டும். | சம்மந்தப்பட்ட பொது மேலாளர், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட துணை பதிவாளர் (பால்வளம்)கள் நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை –51 | ஆணையர் அலுவலகம், பால்வளத்துறை சென்னை–51<br>044–25555193 |
| 8. | **<u>பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை சார்ந்த 550 முன்னோடி விவசாயிகள் ரூ27 இலட்சம் செலவில் வெளிமாநிலங்களில் உள்ள பால் பண்ணைகளை பார்வையிட்டு தமிழ்நாட்டின் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை தொழிலை மேம்படுத்துதல்.</u>** | பால் உற்பத்தியாளர்கள் | பால் உற்பத்தியாளகள், கூட்டுறவுசங்கங்களுக்கு பால் உற்பத்தி செய்யும் உறுப்பினராக இருக்க வேண்டும். | சம்மந்தப்பட்ட பொது மேலாளர், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட துணை பதிவாளர் (பால்வளம்)கள் | ஆணையர் அலுவலகம், பால்வளத்துறை சென்னை–51<br>044–25555193 |